செய்தி வெளியீடு எண்:978 நாள்:29.10.2021

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021–22ஆம் ஆண்டிற்கான இத்துறையின்மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு பொங்கல், குடியரசு தினம், தமிழ்வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய ஐந்து விழா நாட்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவு கட்டணம் 19.04.2012–க்கு பிறகு உயர்த்தி வழங்கப்படாத நிலையில், தற்போது விலைவாசி உயர்வுக்கேற்றவாறு பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.20/– லிருந்து ரூ.40/–ஆகவும் கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.40/– லிருந்து ரூ.80/– ஆகவும், உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 1,25,295 மாணாக்கர் பயன்பெறுவர். "

2. ஆதிதிராவிடர் நல விடுதிகளில், தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவிற்கான கட்டணத் தொகையை 2021–2022 ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.20/– லிருந்து ரூ.40/–ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.40/– லிருந்து ரூ.80/– ஆகவும், உயர்த்தி வழங்கியும், அதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.1,14,51,200/–ஐ ஒப்பளிப்பு செய்தும் அரசாணை (நிலை) எண்.77, ஆதி(ம)பந (ஆதிந4)துறை, நாள் 26.10.2021இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பண்டிகை

நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவிற்கான கட்டணத் தொகையை 2021–2022 ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.20/– லிருந்து ரூ.40/–ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.40/– லிருந்து ரூ.80/– ஆகவும், உயர்த்தி வழங்கியும், அதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.27,12,200/– ஐ ஒப்பளிப்பு செய்தும் அரசாணை (நிலை) எண். 78 ஆதி(ம)பந (ஆதிந4)துறை, நாள் 26.10.2021இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9